**செம்பாக்கம் நகராட்சியில் 21.11.2019ம் நாள் வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற அவசரக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திருமதி. மு.ரா. வசந்தி**
**தனி அலுவலர் / ஆணையாளர்,**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

அரசாணை எண். (MS) 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள் 19.11.2019-ன் படி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-28 அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்: 20.11.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின் படியும், அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள் 26.7.2018ன் படி

1. 01.10.2017ம் தேதி முதல் 31.03.2018 வரை சொத்து வரி மறு சீரமைப்பு (Remeasurement) செய்து உயர்த்தப்பட்டதையும்,
2. 01.04.2018ம் தேதி முதல் சொத்து வரி பொது சீராய்வு (Revision of Property Tax) மூலம் உயர்த்தப்பட்ட சொத்து வரி உயர்வினையும்,
3. 01.04.2018 முதல் உயர்த்தப்பட்ட சொத்து வரி விதிப்புகளின் மண்டல மதிப்புகளையும் (Zonal Rates).

நிறுத்தி வைக்கத் உத்திரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** **1.** அரசாணையினை பார்வையிட்டு, பதிவு செய்யலாம்.
**2.** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.562** **1. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**
**2. அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

செம்பாக்கம் நகராட்சியின் 2018–2019ம் நிதியாண்டின் தணிக்கை அறிக்கை பத்தி எண்.62ல் 2018–2019ம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.91312/– ஐ உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்தி அதன் விவரத்தினை தணிக்கை அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, 2018–2019ம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணத் தொகை ரூ.91312/– ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** நகராட்சி வருவாய் நிதியிலிருந்து தணிக்கை கட்டணம் செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.563 அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 15 வார்டுகளில் சொத்து வரி மற்றும் வரியில்லா இனங்களின் வசூல் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஆட்டோ மைக்செட் மூலம் விளம்பரம் செய்யவும், இதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேலும், இப்பணியினை ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதை தவிர்த்து அவசர அவசியம் கருதி, உள்ளூர் விளம்பர நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று, குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | | |
|---|---|---|---|---|
| | | ஜோஹிந்தரா நெ.40, மாடம்பாக்கம் மெயின் ரோடு, மடிப்பாக்கம், சென்னை 91 | ராஜ்கன்னா சவுண்டு சர்வீசஸ் 21, வேளச்சேரி மெயின் ரோடு, சந்தோஷபுரம், சென்னை 73 | எ டு இசெட் சர்வீசஸ் 111, வேளச்சேரி மெயின் ரோடு, வேளச்சேரி, சென்னை 42 |
| 1 | 15 வார்டுகளில் சொத்து வரி மற்றும் வரியில்லா இனங்களின் வசூல் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஆட்டோ மைக்செட் மூலம் விளம்பரம் செய்தல் பணி | ரூ.1800/- | ரூ.2000/- | ரூ.2200/- |
| | | குறைவு | அதிகம் | அதிகம் |

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் மன்ற முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.564 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

செம்பாக்கம் நகராட்சியில் 15.11.2019 அன்று பெறப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்ட நிதி பணிகளுக்கான இரண்டு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| | **தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2019-20** | | |
| 1 | **சிப்பம் -1** செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1, 3, 4, 7, 11 மற்றும் 12 ஆகிய வார்டுகளில் தார் சாலை பணிகள் | 150.00 | 1. திரு. கே. ஆர். வடிவேல் |
| | | | 2. திரு. பி. சந்திரன் |
| 2 | **சிப்பம் -2** செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5 மற்றும் 7 ஆகிய வார்டுகளில் தார் சாலை பணி | 150.00 | 1. திருமதி. ஜெ. தெய்வகனி |
| | | | 2. திருமதி. ஆர். சுஜாதா |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 மற்றும் 2 பணிகளுக்கு தலா இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் முன்னிலையில் தொழில்நுட்ப கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதிகள் பெற்று தேர்வு செய்யப்பட்டுள்ளன.

தொழில்நுட்ப கூர்ந்தாய்வில் தேர்வு செய்யப்பட்டுள்ள கீழ்கண்ட பணிகளுக்கான விலை ஒப்பந்தப்புள்ளியினை (Price Bid) 18.11.2019ல் திறக்கப்பட்டு கீழ்கண்ட விவரப்படி ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| | **தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2019-20** | | | |
| 1 | **சிப்பம் -1** செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1, 3, 4, 7, 11 மற்றும் 12 ஆகிய வார்டுகளில் தார் சாலை பணிகள் | 150.00 | 1. திரு. கே. ஆர். வடிவேல் | மதிப்பீட்டை விட 4.90% அதிகம் |
| | | | 2. திரு. பி. சந்திரன் | மதிப்பீட்டை விட 7.90% அதிகம் |
| 2 | **சிப்பம் -2** செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5 மற்றும் 7 ஆகிய வார்டுகளில் தார் சாலை பணி | 150.00 | 1. திருமதி. ஜெ. தெய்வகனி | மதிப்பீட்டை விட 4.80% அதிகம் |
| | | | 2. திருமதி. ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 7.24% அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்களுக்காக பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக சிப்பம் 1ற்கு 4.90% மதிப்பீட்டை விட அதிகமாக திரு. கே. ஆர். வடிவேல் மற்றும் சிப்பம் 2ற்கு 4.80% மதிப்பீட்டை விட திருமதி. ஜெ. தெய்வகனி என்பவர் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளனர். மதிப்பீட்டை விட ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை அதிகமாக உள்ள காரணத்தினால் ஒப்பந்த தொகையினை குறைத்து தரக்கோரி ஒப்பந்ததாரருக்கு 18.11.2019ல் கடிதம் அனுப்பப்பட்டதை தொடர்ந்து மேற்படி ஒப்பந்ததாரர் மூலம் 20.11.2019ம் தேதிய கடிதத்தில் சாலைப்பணிக்கான பொருட்களின் விலை, பணியாளர்களின் ஊதியம், வாகனங்களின் டீசல் விலை உயர்வு ஆகிய காரணங்களினால், மதிப்பீட்டு தொகையை விட முறையே சிப்பம் 1ற்கு 4.90% மற்றும் சிப்பம் 2ற்கு 4.80% மதிப்பீட்டை விட கூடுதல் தொகைக்கு இப்பணியினை செய்ய சம்மதம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளார். எனவே, மன்றம் பரிசீலத்து முடிவு செய்யலாம்.

2. மதிப்பீட்டிற்கு கூடுதலான தொகையினை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 565 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

செம்பாக்கம் நகராட்சியில் வருவாய் மற்றும் செலவின தலைப்பின் கீழ் பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவை வரி பிடித்தங்களை உரிய தலைப்பில் மாதா மாதம் செலுத்தவும் கலந்தாலோசகர் மூலம் வலைதளத்தில் கணக்குகள் தாக்கல் செய்யவும், இதற்கான கலந்தாலோசகர் கட்டணம் பிரதி மாதம் வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.566 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

செம்பாக்கம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவின் கீழ் கொசுப்புழு மற்றும் முதிர்கொசு ஒழிப்பு மருந்துகள் அடிப்பதற்காக புதியதாக Indoor Fogging Machine கொள்முதல் செய்வதற்கான 7.11.2019ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்பித்துள்ள ஒப்பந்ததாரர் மூலம் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | மாதாஜி எலக்ட்ரிகல்<br>நெ.222/எ, ஈஸ்வரன் நகர்,<br>ஆவடி ரோடு, ரெட்ஹில்ஸ் | ரூ.20160/–<br>ரூ.265.50/– | அதிகம் |

| | | | |
|---|---|---|---|
| | சென்னை – 600092. | | |
| 2 | பிரைம் ஏஜென்சிஸ்,<br>நெ.34/86, தெற்கு போர்ட் தெரு,<br>விருதாசலம் - 606001 | ரூ.18480/–<br>ரூ.247.80/– | குறைவு |

**அலுவலக குறிப்பு:** Indoor Fogging Machine கொள்முதல் செய்வதற்கான பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.567 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

செம்பாக்கம் நகராட்சியில் **2019–20** ம் ஆண்டின் பொது நிதியின் கீழ் **15.11.2019**ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பார்வைக்கும்,

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.5 டெல்லஸ் அவென்யு அப்துல் கலாம் 3வது குறுக்கு தெரு பூங்கா சுற்றுச்சுவர் அமைத்தல் பணி | 9.90 | எல். சதீஷ்குமார் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | எல். கிஷோர் குமார் | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |
| 2 | வார்டு எண்.6 கலைவாணி தெரு (அலுவலக முன்புறம்) மழைநீர் வடிகால்வாய் பணி மற்றும் நகராட்சி அலுவலக மராமத்து மற்றும் வர்ணம் பூசுதல் பணி | 9.80 | கே. ராமதாஸ் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 1.30% அதிகம் |
| 3 | வார்டு எண்.7 ராஜ ராஜேஸ்வரி நகர் விரிவு மழைநீர் வடிகால்வாய் பழுது பார்த்தல் பணி | 5.50 | ஜெ. தெய்வகனி | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |
| 4 | நகராட்சி பகுதியில் வீட்டு குழாய் இணைப்பிற்காக குடிநீர் குழாய் தொடர் நீட்டிப்பு செய்தல் பணி | 6.00 | எஸ்.வி.பி எலக்ட்ரிகல்ஸ் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | ராஜலட்சுமி கான்ட்ராக்ட்ஸ் | மதிப்பீட்டை விட 1.30% அதிகம் |

**அலுவலக குறிப்பு:** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.568 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் அருள்மிகு ஸ்ரீ அத்திவரதர் வைபவத்தில் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு அத்திவரதரை தரிசிக்க வரும் பக்தர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் வேண்டுகோளினை ஏற்று தினசரி நாளிதழ்களில் மாநில அளவில் முதல் பக்கத்தில் 15 செ.மி x 15 செ.மீ என்ற அளவிலான விளம்பரம் உதவி இயக்குநர், செய்த மக்கள் தொடர்பு துறை, காஞ்சிபுரம் மாவட்டம் மூலம் வெளியிடப்பட்டது. அத்தி வரதர் வைபவம் மிகவும் பிரசித்தி வாய்ந்ததாகவும், இம்மாவட்டத்தில் நடைபெறுவதால் மாவட்ட ஆட்சியர் மூலம் விளம்பரம் செய்யும் விளம்பர கட்டணங்களை மாவட்டத்தில் உள்ள உள்ளாட்சி நிறுவனங்கள் மூலம் பகிர்ந்தளித்து செலவினம் மேற்கொள்ள நேரடியாக அறிவுரை வழங்கினார். இதன் படி இந்நகராட்சிக்கு விளம்பரம் செய்தமைக்கான விளம்பர கட்டணம் இந்நகராட்சியின் பங்களிப்பு தொகையாக (ரூ.155925 + GST) ரூ.163721/- ஐ விளம்பர நிறுவனமான ஆட் வேவ் அட்வர்டைசிங் பிரைவேட் லிட் நிறுவனத்திற்கு வழங்க பில் பட்டியல் வரப்பெற்றுள்ளது. பில் தொகை ரூ. 163721/- நகராட்சி பொது நிதியில் வழங்க மன்றத்திற்கு அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.569 அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

செம்பாக்கம் நகராட்சி பொது நிதி 2019-20-ன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைகும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.5 சங்கோதி அம்மன் கோயில் தெரு 4வது தெரு, குறுக்கு தெரு மற்றும் 5வது தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி | 9.00 |
| 2 | வார்டு எண்.5 சங்கோதியம்மன் கோயில் தெரு - MAV வசந்தம் அவென்யூ மற்றும் 3வது தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி | 7.50 |
| 3 | செம்பாக்கம் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள 12 எண்ணிக்கையிலான பூங்காக்களை பராமரிப்பு பணிக்காக தேவைப்படும் பணியாட்களை சப்ளை செய்தல் பணி. | 9.80 |
| 4 | வார்டு எண்.1 திருமலை நகர் பூங்கா – 2ல் உள்ள உள்விளையாட்டு கூடத்தில் கூடுதலாக விளக்குகள் மற்றும் காற்று போக்கிகள் பொருத்தும் பணி. | 0.85 |
| 5 | குளோரினேஷன் அமைப்பில் உள்ள மின் மோட்டார்கள் பழுது நீக்கம் மற்றும் | 3.00 |

| | | |
|---|---|---|
| | பராமரிப்பு பணி செய்தல். | |
| 6 | வார்டு எண்.1 வேம்புலி நகர் 1வது தெரு, வார்டு எண்.4 நாகலிங்கம் தெரு, அம்பேத்கார் தெரு மேற்கு 1வது குறுக்கு தெரு, திருக்குறள் 3வது குறுக்கு தெரு ஆகிய தெருக்களுக்கு பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி மற்றும் அம்பேத்கார் தெரு கிழக்கு பகுதியில் சிறுபாலம் அமைத்தல் பணி | 9.90 |
| 7 | வார்டு எண்.1 முதல் 15 வரை குடிநீர் பகிர்மான குழாய் விடுபட்ட தெருக்களில் பகிர்மான குழாய் பதித்தல் பணி | 9.80 |

**அலுவலக குறிப்பு :–**

1. தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.570 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**தனி அலுவலர் மற்றும் ஆ ணையாளர்**
**செம்பாக்கம் நகராட்சி**